**தமிழச்சி தங்கபாண்டியன்**

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

01.08.2023

**<u>கேள்வி:-</u>**

அ) சுகாதார அமைச்சகமானது, சமூகநீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்துடன் கலந்தாலோசித்த பிறகு, தேசிய குடும்ப சுகாதார ஆய்வு (NFHS) 6-லிருந்து மாற்றுத்திறனாளிகள் என்ற பத்தியை நீக்கி இருக்கிறதா?

ஆ) அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

இ) மேற்கூறியதிலிருந்து மாற்றுத்திறனாளிகள் என்ற நெடு வரியை அகற்ற பரிந்துரைக்க சம்பந்தப்பட் அமைச்சகம் சார்ந்துள்ள சான்றுகளின் விவரங்கள் என்ன? மற்றும்

ஈ) குறைபாடுகள் உள்ள நபர்களின் உரிமை சட்டத்தில் யார் (RPWF) பட்டியலிடப்பட்டுள்ள 21 உரிமைகளும் நேஷனல் சாம்பிள் சர்வே ஆர்கனைசேஷன் (NSSO) கணக்கெடுப்பில் அடங்கியுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

**<u>மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணைய அமைச்சர் லத்திமா பூமிக் பதில்</u>**

அ) முதல் இ) வரை:

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பெரும்பாலான தகவல்கள் தேசிய மாதிரி ஆய்வு (NSSO) 76 வது சுற்று கணக்கு எடுப்பு அறிக்கையில் ஏற்கனவே உள்ளன.

அதாவது, "மாற்றுத்திறனாளிகளின் கணக்கெடுப்பு". இது புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் (MOSPI) நடத்தப்பட்ட பிரத்யேக கணக்கெடுப்பாகும்.

(NFHS) 6ல் சேர்க்கப்பட வேண்டிய கேள்விகளை கண்டறிய, தொழில்நுட்ப ஆலோசனை குழு மற்றும் சம்பந்தப்பட்ட மத்திய பிரதிநிதிகள் அடங்கிய, பிறகு, உயர்மட்ட குழுக்களின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டது என்று சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் தெரிவித்திருந்தது.

சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், நிதி ஆயோக், போன்ற அமைச்சகங்கள், டொமின் நிபுணர்கள் ஆகியோரின் விரிவான விவாதங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு பிறகு மேற்கண்ட NFHS 6ல் உயலாமை தொடர்பான கேள்விகளை சேர்க்கக்கூடாது என்று முடிவு செய்தனர். ஜூலை - டிசம்பர் இடையே, 2018ல், குறிப்பிட்ட அம்சம் பற்றிய விரிவான தகவல்களை சேகரித்துக் கொள்ளலாம்...

******